பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 25 | செவ்வாய்க்கிழமை | 12.09.2023 | அதிர்வு 42

## நான்கு வயது சிறுமி நித்திரையில் மரணம்

ஹொரனை பகுதியில் நித்திரையின் போது நான்கு வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வழமையை போன்று சிறுமி நித்திரையிலிருந்துள்ளார். இதன்போது சிறுமி சிறுநீர் கழித்தமையால் 06

# பொறுப்புக்கூறல் திட்டத்தை முற்றாக நிராகரித்தது அரசு

## ஜெனிவா அமர்வில் நேற்று அறிவித்தார் இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி




**ஜெனிவா, செப்ரெம்பர் 12**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை இலங்கை அரசு முற்றாக நிராகரிக்கின்றது என ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக தெரிவித்தார். 02

# சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு உங்கள் புனிதத் தன்மையை நிரூபிக்குக!

## இலங்கை அரசிடம் சுரேஷ் வேண்டுகோள்

"சனல் – 4 ஏற்கனவே வெளியிட்டுள்ள இறுதிப் போர் ஆவணப்படம் தொடர்பிலும், தற்போது வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்தும் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு தனது புனிதத் தன்மையை நிரூபிக்க வேண்டும்."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். 06



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி; ஜெனிவா அமர்வில் நேற்று சுட்டிக்காட்டு

## உரிய முறையில் கையாள வேண்டும் என்று கனடா வலியுறுத்து



முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தை இலங்கை அரசு உரிய முறையில் கையாள வேண்டும் எனக் கனடா வலியுறுத்தியுள்ளது.

புதைகுழி தொடர்பான விசாரணைகள் 06

# பஸ் விபத்தில் 15 பேர் காயம்



இரண்டு பஸ்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கேகாலை, அவிசாவளை 06

# கூட்டத்தில் குழப்பம் விளைவித்த குற்றத்தை ஏற்றார் ஞானசார தேரர்

## ரூ.3 லட்சம் செலுத்த நீதிமன்றம் உத்தரவு

ஜாதிக பல சேனாவின் தலைவர் வடரேக விஜித்த தேரர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டை பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தில் 02



## இரகசியம்



சில எழுத்துக்களுக்கு வசீகர சக்தி உண்டு. எம்.ஜி.ஆர். என்ற பதமும் அத்தகையது தான். தமிழர் நெஞ்சங்களில் பதிந்த அந்த எம்.ஜி.ஆர். என்று சொல்லை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் பத்தி எழுத்துகளில் வேறு ஓர் அர்த்தத்தில் குறிப்பிட்டிருப்பதைப் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

2015 முதல் இப்போது வரை ஆட்சி செய்யும் இலங்கையின் அதிகாரத் தலைமையை இப்படி மூன்றெழுத்தில் குறிப்பிட்டிருந்தார் அந்தப் பத்தி எழுத்தாளர். மைத்திரி, கோட்டா, ரணில் என்று அடுத்தடுத்து மூன்று ஜனாதிபதிகளின் பெயரை தான் அந்தக் கட்டுரையாளர் MGR என்று எழுத்துகளில் குறிப்பிட்டிருந்தார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். எங்கே, இந்த மூன்று பேரும் எங்கே என்று எண்ணிப் பார்த்தேன். பொன்மனச் செம்மலின் கால் தூசிக்குக் கூட இவர்கள் நிகராக மாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

இப்படி சில பெயர்களைச் சுருக்கி எழுதுவது சில சமயங்களில் கனகச்சிதமாக பொருந்தி விடுவதும் உண்டு.

இப்போது அதிகம் அடிபடும் பெயர் 'சனல்-4'.

அதை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று சுருக்கி 'C4' எனக் குறிப்பிட்டிருந்தது. 'C4' என்பது மிக உயர் வெடிப்பு சக்தி கொண்ட வெடி மருந்து. இலங்கை அரசியலில் பெரும்வெடிகுண்டு போன்ற வெடிப்பை ஏற்படுத்திய ஊடகத்துக்கு 'C4' என்று பெயரிட்டமை கனகச்சிதம்தான்.

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வாரம் ஜெனிவா சென்றார். அங்குள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் இலங்கை தொடர்பான விடயத்தை ஒட்டிய கலந்துரையாடலில் சுமார் 15 நாடுகளின் பிரதிநிதிகளுடன் அவரும் கலந்து கொண்டிருந்தார். இலங்கை நிலைமையை அவர்களுக்கு எடுத்துரைத்திருந்தார் என்பது தெரிந்ததே.

பின்னர் அவர் கனடா ஒட்டோவாவில் நிற்கின்றார் என்றார்கள்.

கனடாவில் அமைச்சராகப் பதவி



ஏற்றிருக்கும் ஈழத் தமிழரான கரி ஆனந்த சங்கரியை அவர் சந்தித்து உரையாடும் படத்தை கனடாவில் இருந்து நண்பர் ஒருவர் அனுப்பி இருந்தார்.

அதற்கிடையில் –

அவர் அமெரிக்காவின் வொஷிங்டன் டி.ஸியில் அந்த நாட்டு இராஜாங்க அமைச்சின் மூத்த அதிகாரிகளுடன் நேற்று சந்திக்க விருந்தார் என்று அமெரிக்க நண்பர் ஒருவர் தகவல் கூறினார். அது பற்றிய விவரங்கள் கிட்டினால் நாளை தருவேன்.

# சுதந்திரக் கட்சிக்கு புதிய செயலாளர்

## கட்சியின் மத்திய குழு நேற்று கூடி தெரிவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அவசர மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கட்சியிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் முதன் முறையாக நேற்று மத்திய செயற்குழு கூடியிருந்தது.

தன்னைக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கும் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்த நிலையில், அதனை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

அத்துடன், பதில் பொதுச்செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட சரத் ஏக்கநாயக்க அந்தப் பதவியில் செயற்படுவதற்கும் நீதிமன்றம் தடை பிறப்பித்திருந்தது.

இவ்வாறான நிலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றிருந்தது.

## பொறுப்புக் கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 54 ஆவது அமர்வின் ஆரம்பத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை முன்னிறுத்தி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை சந்தேகத்துக்குரிய ஆணை எனவும் அவர் வர்ணித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொறுப்புக்கூறல் திட்டத்துக்கு வழிவகுத்த 46/1, 51/1 தீர்மானங்களை இலங்கை அரசு முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க விரும்புகின்றேன். எழுத்துமூல அறிக்கைகளையும் முடிவுகளையும் பரிந்துரைகளையும் நாம் நிராகரிக்கின்றோம்.

இந்தத் தீர்மானங்களின் காணப்படும் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளாததால் பல நாடுகள் இந்தத் தீர்மானங்களை எதிர்த்தன அல்லது அதில் வாக்களிப்பதைத் தவிர்த்தன என்பதை நாங்கள் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். குறிப்பாக ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை. ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளமை முன்னொரு போதும் இடம்பெறாத விடயம்.

இது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங்கிய ஆணைக்கு அப்பால் செல்கின்றது என்பதை இலங்கை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது. இந்தத் தீர்மானங்கள் உள்விவகாரங்களில் தலையிடுபவை சமூகங்களைத் துருவமயப்படுத்துபவை.

இந்தத் தீர்மானங்களை மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகவும் தங்களின் உள்நாட்டு அரசியலுக்காகவும் ஒருசில நாடுகள் பின்பற்றுகின்றன.

இந்தத் தீர்மானங்களுக்கு நிதி சார்ந்த தாக்கங்கள் குறித்து பல நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளன. இது பேரவையினதும் உறுப்பு நாடுகளினதும் வளங்கள் மீது பயனற்ற விதத்தில் செலவுகளை உருவாக்கக்கூடியது என்பதை இலங்கை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை இதற்கு ஒத்துழைப்பு வழங்காது. எனினும், பல்தரப்பு கட்டமைப்பில் ஆக்கபூர்வமாகப் பங்கெடுக்கின்ற நாடு என்ற அடிப்படையிலும், சர்வதேச சமூகத்துடனான எங்களின் ஆழமான ஈடுபாட்டைக் கருத்தில்கொண்டும் பேரவையின் ஏனைய பொறிமுறைகளுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை இலங்கை தொடர்ந்தும் பேணும்." – என்றார்.

## கூட்டத்தில் குழப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்புக்கொண்டார்.

அதனால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கவும் அவர் இணங்கினார்.

2014ஆம் ஆண்டு கொழும்பு நிப்போன் ஹோட்டலில் ஜாதிக பல சேனாவின் தலைவர் வடரேக விஜித்த ஏற்பாடு செய்திருந்த ஊடகச் சந்திப்பில் அத்துமீறி நுழைந்து குழப்பம் விளைவித்த கலபொடஅத்தே ஞானசார தேரர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஞானசார தேரர் உட்பட ஏழு பேர் மீது இவ்வாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

ஞானசார தேரர் உட்பட குற்றம் சுமத்தப்பட்ட ஏழு பேரையும் முறைப்பாடு செய்த தரப்பினருக்கு மூன்று லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. மீண்டும் இவ்வாறான குற்றங்களைச் செய்யக் கூடாது என கோட்டை நீதவான் திலின கமகே அவர்களைக் கடுமையாக எச்சரித்தார்.

# பணத்துக்காகப் புலிகளின் போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்தானே பிள்ளையான்?

## அவரின் குணம் மாறுமா என்று கேட்கின்றார் ஹிருணிகா



பணத்துக்காகப் புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த பிள்ளையான், தற்போது இந்தப் பக்கம் இருப்பதால் அவரின் நடத்தை மாறுமா என்ன...? – என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிகா பிரேமசந்திர.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்களை பிள்ளையானின் வலது கையாக இருந்தவரே வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட நியாயமான காரணம் உள்ளது.

பிள்ளையான என்பவர் பிரபாகரனுடன் இருந்தவர், அந்த அமைப்புடன் இணைந்து செயற்பட்டுவிட்டு, தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அந்த அமைப்பை காட்டிக்கொடுத்தார் பிள்ளையான்.

பிரபாகரின் செயலை நாம் சரியென கூறவரவில்லை. தமக்கு தனி இராஜ்ஜியமாக இருக்க வேண்டும் என பிரபாகரன் நம்பினார். பிரபாகரனுடன் இணைந்து தனி நாட்டுக்காக போராடியவர்தான் பிள்ளையான். அவ்வாறு போராடிய நபர் பணத்துக்காக தனது தலைவரை காட்டிக்கொடுத்தார்.

பிள்ளையானின் இந்த செயல், எமக்கு (சிங்கள மக்களுக்கு) வீரச்செயலாக தெரியலாம். பணத்துக்காக உளவு தகவல்கள், உபாயங்களை அரசுக்கு வழங்கினார். ஒன்றாக இருந்த தனது தலைவரையே காட்டிக்கொடுத்த அந்த நபர் (பிள்ளையான்) எம்முடன் இணைந்ததால் அவரின் இந்த நடத்தை மாறுமா?



பிள்ளையானுக்கு வலது கரமாக இருந்தவர்தான் தற்போது தகவல்களை வெளியிட்டுள்ளார். பிள்ளையான் சிறையில் இருக்கும்போது, முஸ்லிம் அடிப்படைவாசதிகளை சந்தித்து, கோட்டாவை வெற்றிபெற வைப்பதற்காக இந்த திட்டத்தை தீட்டினார் என அவர் கூறியுள்ளார் என்றார் ஹிருணிக்கா.

# மின்மாற்றியுடன் பஸ் மோதியதில் மின் விநியோகம் பெரும் பாதிப்பு

## அம்பலாந்தோட்டையில் சம்பவம்



அம்பலாந்தோட்டை நகரில் தனியார் பஸ் ஒன்று மின்சார சபையின் மின்மாற்றியுடன் மோதி முற்றாக சேதமடைந்துள்ளது. அம்பலாந்தோட்டை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரண்டு தனியார் பஸ்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி காரணமாக தனியார் பஸ்ஸில் ஏறிய ஒரு குழுவினர், சாரதியை தாக்கியமையுடன் பஸ்ஸை அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தை நோக்கிச் செலுத்துமாறு நிர்ப்பந்தித்துள்ளனர்.

இதன்போது கட்டுப்பாட்டையிழந்த பஸ் மின்மாற்றியுடன் மோதியுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியால் தனித்துச் செயற்பட முடியாது!

## சாகர காரியவசம் தெரிவிப்பு




ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தாலும், பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் அவரால் தனித்துச் செயற்பட முடியாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாகம் தொடர்பில் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகிறார் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது சாகர காரியவசம் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டில் ஜனநாயக போராட்டம் என்று முன்னெடுக்கப்பட்ட அரசியல் சூழ்ச்சியின் பின்னணியை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி அரசியல்

(6ஆம் பக்கம் பார்க்க...)

# நல்லூரான் 22ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் 22ஆம்நாள் மாலை உற்சவமான ஒருமுகத் திருவிழா நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக முருகப்பெருமான் குதிரைவாகனத்தில் வீதியுலா வந்தார்.

(படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்)























# சுரேஷ் சலேயின் முறைப்பாட்டின் பேரில் ‘சனல்-4’ மீது பிரிட்டனில் விசாரணை!

“சனல் - 4” தொலைக்காட்சியின் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான ஆவணப்படம் குறித்து பிரித்தானியாவின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குப்படுத்தல் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பந்தமான சதித்திட்டத்தை அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மேல் சுமத்தி “சனல்-4” ஒளிப்பரப்பிய ஆவணப்படம் குறித்து அவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சதித்திட்டம் குறித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக இதற்கு முன்னர் தான் சாட்சியங்களுடன் பதிலளித்திருந்த நிலையில், “சனல்-4” தொலைக்காட்சி வேண்டும் என்றே தன்னை இலக்கு வைத்து அவதூறு ஏற்படுத்தும் வகையில் இந்த ஆவணப்படத்தை ஒளிப்பரப்பியுள்ளதாக சுரேஷ் சலே, பிரித்தானியாவின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குப்படுத்தல் பணியகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு சம்பந்தமாக இலத்திரனியல் ஊடக ஒழுங்குப்படுத்தல் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுரேஷ் சலேவின் சட்டத்தரணி பசன் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

“சனல்-4” தொலைக்காட்சி ஆவணப்படத்தை வெளியிடுவதற்கு முன்னர் கடந்த ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி சுரேஷ் சலேவிடம் குற்றச்சாட்டு சம்பந்தமான விடயங்களை கேட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்பதுடன் தாக்குதல் நடந்த காலப்பகுதியில் தான் இலங்கையில் இருக்கவில்லை என்பதை சுரேஷ் சலே மறுநாள் “சனல்-4” தொலைக்காட்சிக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தார் எனவும் சட்டத்தரணி பசன் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# ஓட்டோக்காரர்கள், பஸ் பயணிகளிடம் கொழும்பில் கொள்ளையடிக்கும் கும்பல்

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஓட்டோ உரிமையாளர்கள், பஸ் பயணிகளிடம் பணம், சொத்துக்களை கொள்ளையடிக்கும் கும்பல் தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்குத்தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த கும்பல் திட்டமிட்ட முறையில் ஓட்டோ மற்றும் பொது போக்குவரத்து சேவைகளில் கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கும்பலின் பல திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் கொழும்பு, களனி, நீர்கொழும்பு, நுகேகொட, கல்கிஸ்ஸ மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

தம்பதிகள் அல்லது தனி நபர்களாக நெடுஞ்சாலையில் காத்திருந்து வாடகை ஓட்டோவில் ஏறி போதை அல்லது மயக்கம் ஏற்படுத்தும் மாத்திரை ஒன்றை கொடுத்து உரிமையாளர்களின் பணம், கைத்தொலைபேசிகள் மற்றும் சிலரது ஓட்டோக்களை கொள்ளையடித்துச் செல்கின்றனர் என மேல் மாகாண உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தொலைதூர சேவை பஸ்களில் பயணிக்கும் பயணிகள் தூங்கும் போது கையடக்கத் தொலைபேசிகள், பணம் மற்றும் பொருட்கள் திருடப்படுவது தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்குத் தொடர்ந்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன எனவும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராக கடமையாற்றும் நபர் ஒருவரும் நேற்று முக் கஹதுடுவ பிரதேசத்தில் இதேபோன்றதொரு சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

அவர் தனது பணி முடிந்து ஓட்டோ சேவையில் ஈடுபட்டிருந்த போது, காலி முகத்திடலுக்கு அருகில் களுபோவில செல்லவிருக்கின்றார் எனக் கூறி முச்சக்கர வண்டியில் ஏறியுள்ளார்.

இவ்வாறு பயணித்த நபர் களுபோவில வைத்தியசாலைக்கு அருகில் ஓட்டோச் சாரதியின் கழுத்தில் கத்தியை வைத்து சாரதியின் பணப்பையில் இருந்த சுமார் இரண்டாயிரம் ரூபாவுடன் ஓட்டோவையும் கொள்ளையடித்து சென்றுள்ளார்.

இது தொடர்பில் கஹதுடுவ பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்டு மக்களை மயக்கமடையச் செய்யும் இவ்வாறான திருட்டுக்களைத் தடுக்க சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும், கடந்த வாரம், கொட்டாஞ்சேனை மற்றும் கிராண்ட்பாஸ் பிரதேசங்களில் இரண்டு வயோதிபர்களுக்கு திரவத்தை குடிக்கக் கொடுத்து அவர்களது பணம் கொள்ளையடிக்கப்பட்ட இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

திரவத்தை அருந்திய இரு வயோதிபர்களில் ஒருவர் இன்னும் சுயநினைவின்றி இருக்கிறார் எனவும் மற்றையவர் சுயநினைவு பெற இரண்டு நாள்கள் எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதார ஒழுக்கம்

முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் சர்வதேச ரீதியில் மதிக்கப்படுகின்ற பொருளாதார வல்லுநருமான இந்திரஜித் குமாரசாமி இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து முக்கிய எச்சரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கிறார்.

தேர்தல்களைத் தள்ளிப் போடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அட்டவணை தொடர்பான போக்கை நியாயப்படுத்தும் கருத்தியலாக இருந்தாலும் கூட, அது அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமே.

பொருளாதார நெருக்குவாரத்தில் சிக்குண்டு கிடந்த இலங்கை அதிலிருந்து மீளுவது மற்றும் ஸ்திரத்தன்மையுடன் வளர்ச்சியின் பாதையில் மீளெழுந்து வருகின்றது. தேர்தல்கள் காரணமாக அந்தப் பாதையில் இருந்து திசை திரும்ப இலங்கை அனுமதிக்குமானால், நாடு முன்பிருந்ததை விட மிக மோசமான நெருக்கடியில் சிக்கும் என அவர் கருத்துரைத்திருக்கின்றார்.

"ஒவ்வொரு முறை தேர்தல் நடக்கும் போதும், இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் ஒழுக்கமற்றனவாக மாறிவிடுவதுதான் நமது அனுபவம். தற்போதைய திட்டத்திற்கு முன்பு இதே போன்று சர்வதேச நாணய நிதியத்தின் 16 திட்டங்களை நாம் கொண்டிருந்தோம். இவற்றில் பலவற்றில் நாங்கள் இப்போது செய்ததைப் போலவே நிலைப்படுத்தலில் முன்னேற்றம் கண்டோம். ஆனால், அந்த முன்னேற்றம் எல்லாவற்றையும் தேர்தல் நெருங்கும் போது ஏற்பட்ட விடயங்கள் தலைகீழாக மாற்றிவிட்டன" - என்று விசனத்துடன் கூறினார் குமாரசாமி.

"அடுத்த ஆண்டு தேர்தல் நடத்த வேண்டும். எங்களிடம் மீண்டும் அதே போக்கு இருக்காது என்று நம்புகிறேன். கொள்கைச் சறுக்கல் மூலம் நாம் பெற்ற ஆதாயங்கள் தலைகீழாக மாற இம்முறை அனுமதிக்கக் கூடாது." - என்கிறார் அவர்.

"இந்த நேரத்தில் நாங்கள் வித்தியாசமாகச் செய்யாவிட்டால், எங்களால் நிலையான மீட்சியைப் பெறவே முடியாது," என்று அவர் எச்சரிக்கின்றார்

"நம்மை ஸ்திரமாக நிலைப்படுத்துதல், மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சியின் பாதையில் நாம் சற்று முன்னேறி வருகிறோம். இந்த நேரத்தில், இப்பாதையில் இருந்து தேர்தல்கள் நம்மைத் திசைதிருப்ப நாம் அனுமதித்தால், கடந்த காலத்தில் நாம் சந்தித்ததை விடவும் நம்மைத் தாக்கும் நெருக்கடி மோசமாக இருக்கும். இது 18 மாதங்களுக்கு முன்பு இருந்ததை விட மோசமானதாகும். அதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்." - என்று வெளிப்படையாகப் பேசியிருக்கின்றார் அவர்.

தேர்தல் நெருங்கும் போது, நாட்டின் பொருளாதார நிலைமை, வலிமை, பலம், பலவீனம், இயலுமை, இயலாமை எல்லாவற்றையும் மறந்து, நாட்டின் பொருளாதார கொள்கைகளையே பந்தாடும் விதத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசி நடந்து கொள்வர் நம் அரசியல் தலைவர்கள்.

தூர நோக்கற்ற - பொருளாதார தெளிவோ, தீர்க்கதரிசனமோ இல்லாத - அரசியல் தலைவர்கள் வாக்குகளைச் சுருட்டுவதற்காகவும், மக்கள் செல்வாக்கைப் பெருக்குவதற்காகவும்,கண்மூடித்தனமான கொள்கைப் பிரகடனங்களை மேற்கொள்வர். காரிய சாத்தியமற்ற வாக்குறுதிகளை அள்ளி வீசுவர்.

யதார்த்தபூர்வமற்ற இத்தகைய திட்டங்களும் அவற்றின் பாற்பட்ட நடவடிக்கைகளும் நாட்டை குட்டிச்சுவராக்கி, பெரும் பொருளாதார வீழ்ச்சியை நாட்டுக்குப் பெற்றுத் தந்தன.

அதை மீண்டும் செய்யாதிருப்போம் என்பது இந்திரஜித் குமாரசாமியின் பணிவான ஆலோசனை.

தேர்தல், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று, சர்வதேச நாணய நிதியம் மீட்சிக்குத் தரும் திட்டத்தை ஒன்றுபட்டு நின்று முன்னெடுப்பதே இன்றைய நிலையில் சாலச் சிறந்தது.

## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நம்பத்தகுந்த வகையில் அமைய வேண்டும் எனவும் கனடா கோரியுள்ளது.

இலங்கையில் சமாதானம் மற்றும் சுதந்திரத்தைப் பேணுவது குறித்து கனடா, தொடர்ந்தும் கவனம் செலுத்தும் எனவும் ஐக்கிய நாடுகளுக்கான கனேடியப் பிரதிநிதி நேற்று ஜெனிவா அமர்வில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நான்கு வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவருக்கு மாற்றுடை அணிவதற்காகத் தாய் சிறுமியை நித்திரையிலிருந்து விழிக்கச் செய்துள்ளார்.

எனினும், சிறுமி விழிக்காமல் நித்திரையில் காணப்பட்டதுடன், உடல் குளிர்மையடைந்திருந்துள்ளது.

சிறுமியின் நிலைமை குறித்து கணவரிடம் மனைவி அறிவித்தமையை அடுத்து ஹொரண ஆதார வைத்தியசாலையில் சிறுமி சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமிக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள் சிறுமி ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச விசாரணையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஊடகங்களுக்கு நேற்று அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(அந்த அறிக்கையின் முழு விவரம் 8ஆம் பக்கத்தில்)

## பஸ் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரதான வீதியில் கன்னந்தொட்ட பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து எம்பிலிப்பிட்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும், எம்பிலிப்பிட்டியில் இருந்து கேகாலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் மோதுண்டதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் நால்வர் படுகாயங்களுடனும், 11 பேர் சிறுகாயங்களுடனும் கரவனல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து எம்பிலிப்பிட்டி நோக்கிப் புறப்பட்ட பஸ், பாரவூர்தியொன்றை முந்திச் செல்ல முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என்று பிரதேசவாசிகள் குறிப்பிட்டனர். பாரவூர்தியும் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் ருவன்வெல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொதுஜன பெரமுன...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)

செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் எமது ஆதரவு இல்லாமல் தனித்துச் செயற்பட முடியாது. நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. எமது ஆதரவு இல்லாமல் எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்ச்சியாக இரகசிய பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது. அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்வது தொடர்பில் பஷில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்ததால் அவர் எமது ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் குறிப்பிடவில்லை. இருப்பினும் பெரும்பான்மை பலம் எம்மிடம் உள்ளதால் அரச நிர்வாகம் தொடர்பில் ஆலோசனை வழங்கும் அதிகாரம் எமக்கு உண்டு. – என்று தெரிவித்துள்ளார்.

# நாட்டிற்கு நவீனமயமான அரசமைப்பு தேவை என்கின்றார் நாமல் ராஜபக்ஷ

**நாட்டிற்கு நவீனமயமான அரசமைப்பு தேவை என அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**வீரகெட்டிய பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முல்கிரிகல தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் கூறியவை வருமாறு:-**

டி.எம்.ராஜபக்ஷவுடன் நாங்கள் அரசியலைத் தொடங்கினோம். அதன்படி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எமது அரசியலுக்கு 98 வருடங்கள் ஆகின்றன. மஹிந்த ராஜபக்ஷ 55 வருடங்கள் அரசியலில் இருந்தார். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றி பேசி நேரத்தை செலவிட மாட்டேன்.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நிலையும் இன்றைய மாவட்டத்தின் நிலையும் மக்களுக்குத் தெரியும். அப்போது, இம்மாவட்ட குழந்தைகள், 8 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும் என்று மட்டுமே நினைத்தனர். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பல்கலைக்கழக அனுமதி பற்றி பேசுகிறார்கள்.

உயர்தரப் பரீட்சையே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான ஒரே வழியாக மாறியுள்ளது. இந்த கல்வி முறை மாற வேண்டும். பல்கலைக்கழகங்கள் சுதந்திரமாக முடிவெடுக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அரசாங்கத்தின் நோக்கத்தை கற்பிக்காமல், உலகிற்கு ஏற்றவாறு கல்வி முறையை மறுசீரமைக்கும் அதிகாரத்தை பல்கலைக்கழகங்களுக்கு வழங்க வேண்டும்.

மேலும், மூன்று லட்சம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எழுதும் போது அவர்களில் நாற்பதாயிரம் பேர் பல்கலைக் கழகம் செல்கின்றனர். அந்த பிள்ளைகளை அரச சேவையில் சேர்க்க முடியாது.

ஏனெனில் ஆறு லட்சமாக இருந்த அரச சேவை பதினான்கு இலட்சமாக உயர்ந்துள்ளது. அரசு இயந்திரத்தில் கூடுதல் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவில்லை என்றால், புதிய அரசு ஊழியர்களை சேர்ப்பது நடைமுறையில் இருக்காது. எனவே எதிர்கால குழந்தைகளுக்காக நாம் என்ன செய்வோம்? அவர்கள் தனியார் பல்கலைக் கழகக் கல்வி அல்லது தொழிற்பயிற்சி பெற இடம் வழங்க வேண்டும். பயிற்சி நிலையங்களில் அந்த படிப்புகளுக்கு இடம் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும்.

இந்தச் சவாலை பார்த்த மஹிந்த ராஜபக்ஷ பசுமைப் பல்கலைக்கழகத்தை கட்டினார். கோட்டாபய ராஜபக்ஷவும் நகர பல்கலைக்கழகங்களை நிறுவ முயற்சித்தார். ஆனால் அது வெற்றியடையவில்லை. பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கொடுக்க வேண்டும். பிள்ளைகளை தொழில் வழங்கும் அதிகாரம் பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். நாங்கள் அனைத்தையும் அரசியல் ரீதியாக பார்க்கிறோம்.



அண்மையில், நாடாளுமன்றத்தில் சுகாதாரத் துறை குறித்து விவாதம் நடந்தது. நாடாளுமன்றத்தில் எவ்வளவோ விவாதம் செய்தாலும் கிராம மருத்துவமனைக்கு மருத்துவர்கள் கிடைப்பதில்லை. நம் நாட்டில் மருந்துகளை உற்பத்தி செய்யாத வரை, சர்வதேச நிறுவனங்களை நம்பியே இருக்க வேண்டும். இதனால்தான் அம்பாந்தோட்டை, அனுராதபுரம், ஒயாமடுவ ஆகிய இடங்களில் மருந்துக் கிராமங்களை அமைக்க ஆரம்பித்தனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்களாக விவாதித்து வருகிறோம். இந்த நாள்களில் சனல் 4 ஒரு திரைப்படம் காட்டப்படுகிறது. அந்த சனலுக்கு ராஜபக்ஷக்களுடன், குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுடன் பரம்பரை பிரச்சினை உள்ளது. 2009 ஆம் ஆண்டு இதுபோன்ற பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போர்க்குற்றங்கள் பற்றிய திரைப்படம் எடுக்கப்பட்டது. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் அதனை ஓரளவு ஏற்றுக் கொண்டது. புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இராணுவம் பலவீனமடைந்தது. போர் வீரன் சிப்பாயாக மாறினான். இதனால், புலனாய்வு அமைப்புகள் வீழ்ந்தன. அவர்களின் தன்னம்பிக்கை குறைந்தது.

அதன் முடிவைப் பார்த்தோம். போராட்டம் உருவாகும் போது அதைப் பற்றி அறிய உளவுத்துறை அமைப்புகள் இல்லை. ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச புலனாய்வு அமைப்புகளால் தகவல்கள் வழங்கப்பட்ட போதும் நல்லாட்சி அரசாங்கம் அதனை கண்டுகொள்ளவில்லை. இன்றும் அந்த சனல் ராஜபக்ஷவுக்கு சேறுபூசுவதை விட நமது நாட்டின் புலனாய்வு அமைப்புகளை அழிக்கும் சதியை செய்து வருகிறது. இதனால் சிலர் அரசியல் ஆதாயம் பெறுகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாலவின் மேடையில் சஹ்ரான் என்ற நபர் இருந்தார். தன்னைக் கொன்றவர்களின் தந்தை இப்ராஹிம் ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் உள்ளார். இவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், கோட்டாபய ராஜபக்ஷவுக்குமாகத் தற்கொலை தாக்குதல் நடத்துவார்கள் என்று நினைக்க முடியாது.

எங்களிடம் ஒரு கொள்கை உள்ளது. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமுறை அந்தக் கொள்கைகளை நவீனமயமாக்கி முன்னேற வேண்டும் என்று நான் நம்புகிறேன். நாட்டிற்கு முதலீடுகளை கொண்டு வருவதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். நாங்கள் அதை ஆதரிக்கிறோம். தேசிய வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் நாம் அந்நியமாதலுக்கு எதிரானவர்கள்.

இந்த நாடு நவீன உலகத்தை சமாளிக்க வேண்டும். போராடியவர்களுடன் எங்களுக்குப் பிரச்சினை உள்ளது. வீடுகளை எரித்தும், மக்களைக் கொன்றும் போராட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன அன்றைய தினம் 60 ஆயிரம் இளைஞர்களைக் கொன்றது.

1971, 1988-89 இளைஞர்களின் போராட்டம் தோல்வியடைந்தது. தனி நாடு உருவாக்க விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டம் தோல்வியடைந்தது. நவீன உலகில் டிஜிட்டல் இளைஞர்கள் நடத்திய போராட்டம் கடைசியில் பலனை இழந்துவிட்டது. இந்த நாட்டிற்கு நவீனமயமான அரசமைப்பு தேவை என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி, டபிள்யூ.டி.வீரசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு உங்கள் புனிதத் தன்மையை நிரூபிக்குக!

## இலங்கை அரசிடம் சுரேஷ் வேண்டுகோள்



சனல் – 4 ஊடகம் வெளியிட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான காணொளியில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு மாத்திரமன்றி அது ஏற்கனவே வெளியிட்ட கில்லிங் வீல்ட்ஸ் ஆவணப்படம் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும் சர்வதேச விசாரணையை நடத்தி உண்மையை வெளிக்கொணர்வதுடன் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“கடந்த இரண்டு வாரங்களாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சனல் – 4 வெளியிட்ட 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான சாட்சியங்களை உள்ளடக்கிய ஆவணத் தொகுப்பொன்று பேசுபொருளாக அமைந்திருக்கின்றது.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை போன்றவற்றுக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்த கோட்டாபய ராஜபக்ச, இன்றைய இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் மேற்படி குண்டுத்தாக்குதல் மற்றும் கொலையின் பின்னணியில் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ, பிள்ளையான் போன்றோர் இதனை மறுதலிக்கின்ற அதேசமயம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்கள் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணை தேவை என்னும் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். அதேபோல் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் சர்வதேச விசாரணையைக் கோரியிருக்கின்றார். இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இதனை ஒரு பொய்யான ஆவணம் என்று அதனைத் திட்டவட்டமாக நிராகரித்திருக்கின்றது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடப்பதற்கு முன்பாக மட்டக்களப்பு படுவாங்கரையில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்கள் களவாடப்பட்டிருந்தது. ஆனால், இந்தக் கொலை தொடர்பாக அப்பாவிகளான புனர்வாழ்வு பெற்றுத் திரும்பியிருந்த இரண்டு முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். உண்மையில் இந்தக் கொலையுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளான சஹ்ரான் குழுவினர் தப்பிச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

அதுமாத்திரமல்லாமல் காத்தான்குடியில் ஒரு குண்டை வெடிக்கச் செய்து பரீட்சிக்கப்பட்டபோதுகூட சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்படாமல் அவர்கள் சுதந்திரமாகச் சுற்றித்திரிய அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதுகாப்புத் தரப்பிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதன் காரணமாகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதும் சனல் – 4 ஆவணங்களினூடாக அறியமுடிகின்றது. அதைப்போலவே, லசந்த விக்கிரமதுங்கவின் கொலை பின்னணியிலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்சவின் பெயரும் சாட்சிகளால் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இவை தொடர்பாக எதிர்த்தரப்பிலிருக்கின்ற சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுவெளியில் இருக்கின்ற பல தரப்பினரும் ஒரு சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர். சர்வதேச விசாரணையைக் கோருவதின் அடிப்படைப் பொருளானது இலங்கையின் நீதித்துறையின் மீதும் இலங்கையின் பாதுகாப்புத்துறையின் மீதும் அவர்கள் நம்பிக்கையிழந்திருக்கிறார்கள் என்பதாகும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முவுற்ற போது, இறுதி யுத்தத்தில் ஏறத்தாழ 70 ஆயிரம் பேர் வரை இறந்திருக்கலாம் என்று ஐ.நா. அறிக்கை கூறியது. அது தொடர்பான விசாரணை ஒன்று தேவை என அந்த ஐ.நா. அறிக்கை குறிப்பிட்டிருந்தது. அதன் பிரகாரமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்கு இனப்படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா. சபை ஆலோசனை வழங்கியிருந்தது. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் தீர்மானங்களை இலங்கையின் மாறி மாறி வந்த அரசுகள் நிராகரித்தன. ஆண்டகை மல்கம் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி, பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவருமே சர்வதேச விசாரணையை நிராகரித்தார்கள்.

ஆனால் இன்று கர்தினால் உள்ளிட்ட சிங்கள தரப்பின் ஒரு பகுதியினர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கின்றார்கள். ஏறத்தாழ 260 அப்பாவி மக்களும் 40க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தகுந்த சாட்சியங்களுடன் சனல் – 4 ஒரு ஆவணத் தொகுப்பை வெளியிட்டிருக்கின்றது.

ஆகவே இதில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் இந்த சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று அவர்கள் மறுதலித்தாலும் தாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பதற்கான பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு இருக்கின்றது. அந்தவகையில் எதிர்க்கட்சிகள் கோருவது போல் ஒரு சர்வதேச விசாரணையினூடாகவே அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும்.

இதனைப் போலவே 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக நூற்றுக்கணக்கான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அதுதொடர்பான ஒரு சர்வதேச விசாரணையை கடந்த 14ஆண்டுகளாக தமிழ் மக்கள் கோரிநிற்கிறார்கள். இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு தனது புனிதத் தன்மையை நிரூபிக்க வேண்டும்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக மிகப்பாரிய அளவிலான பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருக்கும் இலங்கை அரசு வெளிநாட்டு மூலதனங்களைக் கவரவேண்டுமாக இருந்தால், இலங்கையில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்தாக வேண்டும். ஆகவே அவற்றை மனதில் கொண்டாவது அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம்.” – என்றுள்ளது.

# உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக பழனிசாமி மானநஷ்ட வழக்கு!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக 1 கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கேட்டு அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த மாதம் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்தார். அவரது பேச்சு பெரும் விவாதப்பொருளாக மாறியது.

இந்த விவகாரத்தில் உதயநிதி செப்டம்பர் 7 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், 'சனாதனம் என்றால் என்ன' என்பதை வீட்டினுள் பத்திரமாக அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களில் இருந்து நான் தேடிக்கொண டிருக்கிறேன் என்று கூறியிருந்தார்.





கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ஆட்டுதாடியின் பின்னால் நீண்ட நாள் ஒளிந்திருக்க முடியாது என்றும், ஆடு ஒருநாள் காணாமல் போகும்போது, நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அவதூறு பரப்பு வகையிலும் உள்ளது. எனவே, தன்னை பற்றி பேச அமைச்சர் உதயநிதிக்கு தடை விதிக்க வேண்டும். ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடாக வழங்க உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சவுதி அரேபிய இளவரசர் பிரதமர் மோடியை சந்தித்தார்



இந்தியாவின் மிக முக்கிய நட்பு நாடாக சவுதி அரேபியா திகழ்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற சவுதி அரேபிய இளவரசர் முகம்மது பின் சல்மான் நேற்று பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இது குறித்து தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, இளவரசர் முகம்மது பின் சல்மானும் நானும் மிகவும் பயனுள்ள பேச்சுவார்த்தையை நடத்தினோம்.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவை மதிப்பாய்வு செய்தோம். எதிர்வரும் காலங்களில் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக தொடர்புகள் மேலும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உணவுப் பாதுகாப்பு, விநியோகச் சங்கிலி உள்ளிட்டவற்றில் இருநாடுகளுக்கும் இடையே மகத்தான ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டாண்மையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஏற்ப பல்வேறு முயற்சிகள் அடையா ளம் காணப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு சென்றுள்ள சவுதி இளவரசருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அப்போது ஊடகவியலாளர்களிடம் பேசிய இளவரசர், இந்தியாவில் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஜி 20 உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய இந்தியாவுக்கு எனது வாழ்த்துகள். உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் உலகிற்கு நன்மை பயக்கும்.

இரு நாடுகளுக்கும் சிறந்த எதிர் காலத்தை உருவாக்க நாங்கள் ஒன்றாக வேலை செய்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# விரைவில் மீண்டும் புரட்சிப் பயணம்: ஓ.பி.எஸ். தகவல்



விரைவில் மீண்டும் புரட்சிப் பயணம் தொடங்க உள்ளது என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

மதுரையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர், இந்தியா என்பதை பாரத் என மாற்றி முறையான அரசாணை வெளியிடப்படவில்லை. அவ்வாறு அறிவிப்பு வெளியான பின்னர் , அது குறித்து பேசலாம்.

தொண்டர்கள் விருப்பத்தின்படி விரைவில் மீண்டும் புரட்சிப் பயணத்தைத் தொடங்க உள்ளேன். சென்னையில் நடந்தது அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அல்ல. அது ஒரு குழுவின் கூட்டம் என்று தெரிவித்தார்.

இறை நம்பிக்கையாளர்கள் போற்றும் ஒரே அரசு தி.மு.க. அரசுதான் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியது கருத்து தெரிவித்த ஓ.பன்னீர்செல்வம், அவர் கூறுவதையெல்லாம் ஒரு கருத்தாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# சீனாவின் பட்டு பாதை திட்டத்திலிருந்து இத்தாலி விலகுவதற்கு தீர்மானம்!




கடல் வழி மார்க்கமாக ஆசியா ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் இணைக்கும் 'பெல்ட் அன்ட் ரோடு' என்ற சீனாவின் பட்டு பாதை திட்டத்தில் இருந்து இத்தாலி விலக முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜி 7 அமைப்பில் இருந்த இத்தாலி மட்டும் கடந்த 2004 ஆம் ஆண்டு சீனாவின் இந்த பட்டு பாதை திட்டத்தில் இணைந்து இருந்தது.

ஆனால் இதனை தொடர்ந்து சீனாவின் இந்த திட்டம் தங்கள் நாட்டின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் அந்தோனியோ தஜானி இந்த மாத தொடக்கத்தில் கருத்து தெரிவித்து இருந்தார்.

இதைப் போல இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி சீனாவின் பட்டு பாதை திட்டத்தில் இணைந்தது மிகப்பெரிய தவறு என்று அவ்வப்போது தெரிவித்து வந்தார்.

இந்த நிலையில், இந்தியாவில் நடைபெற்று முடிந்துள்ள ஜி 20 நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி சீன பிரதமர் லி கியாங்-ஐ சந்தித்து இந்த திட்டத்திலிருந்து இத்தாலி விலக முடிவு செய்துள்ளது என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சீன பிரதமர் லி கியாங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனால் சீன பிரதமர் லி கியாங் வேண்டுகோளை இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் என கூறப்படுகிறது.'

'பெல்ட் அன்ட் ரோடு' என்ற பட்டு பாதை திட்டத்தின் அடுத்த கூட்டம் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் இருந்து இத்தாலி விலக முடிவு செய்து இருப்பது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

# நைஜீரியாவில் படகு கவிழ்ந்து விபத்து: 26 பேர் பலி; பலரை காணவில்லை!



நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் நைஜர் மாகாணம் மொக்வா நகரில் உள்ள ஆற்றில் நேற்று முன்தினம் 100 பேர் படகில் பயணம் மேற்கொண்டனர்.

அண்டை நகரில் விவசாய பணிக்காக இவர்கள் படகில் பயணம் செய்துள் ளனர். நைஜர் ஆற்றில் பயணம் மேற்கொண்ட போது இவர்கள் சென்ற படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படகில் பயணம் செய்த அனைவரும் ஆற்றுக்குள் விழுந்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆற்றில் சிக்கித்தவித்த 30 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால், இந்த படகு விபத்தில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, படகு விபத்தில் பலர் காணாமல் போன நிலையில் அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு நால்வர் காயம்!



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் அமைந்துள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு அருகில் குண்டு வெடித்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரிவினர் பயணித்த வாகனம் ஒன்றை இலக்கு வைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

இந்த வெடிப்பு சம்பவத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர். இதுவரை இந்த சம்பவத்திற்கு எந்வொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் “அற்றார் அழிபசி தீர்த்தல்” என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டத்தின் கீழ் வேலணை, உரும்பிராய், நாவற்குழி ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளன. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நன்கொடையாளர் நடராஜா குகானந்தன் கலந்துகொண்டு உலருணவுப்பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

யுத்தம், கொரோனாப் பேரிடர் போன்ற காரணங்களால் ஏற்கனவே பொருளாதாரரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், அப்பாதிப்புகளில் இருந்து மீண்டெழுவதற்கு முன்பாகத் தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியும் சேர்ந்துகொண்டு அவர்களை மோசமாகப் பாதித்துள்ளது. இதனைக்கருத்திற்கொண்டே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நன்கொடையாளர்களின்அனுசரணையுடன்கொரோனாப் பேரிடர் காலத்தில் ஆரம்பித்த அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.










# ஐ.தே.க. அமைப்பாளர்களுக்கு கட்சி தலைமை அவசர அழைப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து அமைப்பாளர்களும் இன்று கட்சி தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்வது குறித்த யோசனைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.



# பொலிஸ் நிலையத்தில் பெண் உயிரிழப்பு: 4 பொலிஸாருக்கு மீண்டும் விளக்கமறியல்



வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்தார் எனக் கூறப்படும் ராஜன் ராஜகுமாரி என்ற பணிப்பெண்ணின், மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர், இரண்டு சார்ஜன்ட்கள் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் உள்ளடங்கலாக 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்சன கெக்குனவல உத்தரவிட்டுள்ளார்.

தமது வீட்டில் பணிபுரிந்தபோது தங்க நகையை திருடினார் என தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரான சுதர்மா ஜயவர்தன என்பவர் வெலிக்கடை பொலிஸ்நிலையத்துக்குஅளித்தமுறைப்பாட்டுக்கு அமைய, கடந்த மே மாதம் 11 ஆம் திகதி 42 வயதுடைய ராஜகுமாரி என்ற பணிப்பெண் வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

பின்னர், அன்றைய தினம் இரவு குறித்த பெண், திடீர் சுகயீனம் காரணமாக வெலிக்கடை பொலிஸாரால், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

இந்தநிலையில் உயிரிழந்த பணிப்பெண் ராஜன் ராஜகுமாரி, கூர்மையற்ற ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கத்தியால் தன் கழுத்தைத் தானே வெட்டிக் கொண்ட இளைஞன்!

## கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில்





**எஸ் சதீஸ்**

பொகவந்தலாவ,செப்.12

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ செல்வக்கந்தை தோட்டப் பகுதியில் இளைஞன் ஒருவன் கத்தி ஒன்றை எடுத்துத் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்ட சம்பவம் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம் பெற்றுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டில் தந்தையோடு இருந்த இளைஞன் தனது தந்தைக்குத் தெரியாமல் வீட்டில் இருந்த கத்தியை எடுத்துத் தனது கழுத்தை அறுத்துக் கொண்டுள்ளான். இந்தச் சம்பவத்தை கண்ட இளைஞனின் தந்தை கூச்சலிட்டதை அடுத்து அயலவர்களின் உதவியோடு இளைஞன் பொகவந்தலாவ வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டான்.

அதிக குருதி வெளியேறிய நிலையில் இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிழங்கான் ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 38 வயதுடைய இந்நபரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

அவர் தனது கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 45 லட்சம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கிராண்ட்பாஸில் கைப்பற்றப்பட்டன




வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட – சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான – 45 லட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்குக் கொள்கலனில் கொண்டுவரப்பட்டு சுங்கத்துக்கு அறிவிக்கப்படாமல் இவை கொழும்பு கிராண்ட்பாஸ், கிரே லைன் கொள்கலன் பிரிவில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டன என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இந்திய சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் சுங்கப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

இந்தக் கொள்கலன் கடந்த மாதம் 9ஆம் திகதி இந்தியாவின் கட்டுப்பள்ள துறைமுகத்தில் இருந்து கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சட்ட விரோத இறக்குமதி தொடர்பில், இந்த கொள்கலனை விடுவிக்க வந்த இருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு எதிரான சனல் 4 காணொலி மேற்கத்திய நிகழ்ச்சி நிரலின் வெளிப்பாடு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, பௌத்த மதம் ஆகிய நான்கு அதிகார தூண்களின் மீதும் தாக்குதல் நடத்தி நாட்டை அழிக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



மேற்கத்திய நிகழ்ச்சி நிரலின் படி, சனல் 4 அந்தச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வீரகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

சனல் 4 ஊடாக நீதித்துறைக்கு கேடு விளைவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறான கருத்துக்களை கூறுகின்றனர். இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுத் துறைக்கு எதிரான சித்தாந்தங்களை உருவாக்குகிறார்கள். இறுதியில் என்ன நடக்கும்? இந்த நாட்டை அழிக்க ஆரம்பம் ஏற்படும். எமது கட்சியை வழிநடத்தும் மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த தலைவர் என்பதை கட்சி என்ற வகையில் பொறுப்புடன் கூறுகின்றோம். மேலும், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களை கொவிட் தொற்றுநோயிலிருந்து காப்பாற்றினார்.

மக்களின் உயிரைக் காத்த தலைவர்கள் எங்கள் கட்சியில் உள்ளனர். அன்றைய தினம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார், ஏனென்றால் கட்சியை விட நாடு பெறுமதிமிக்கது என்பதால். நாட்டுக்காக எப்போதும் தியாகம் செய்தவர். இன்று 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றோம். ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீளக் கட்டியெழுப்புவார் என நம்பி இன்று கட்சியை பலப்படுத்தி அவருக்கு உதவுகின்றோம். இது கட்சி என்ற வகையில் தலைமை எடுத்த முடிவு.

எமதுகட்சியைபலப்படுத்தும்வேலைத் திட்டம் தற்போது நாடு முழுவதும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெறக்கூடிய சூழலை நாம் உருவாக்கியுள்ளோம். நான் சொல்கிறேன், தெற்கில் தகுதி தெரிந்த மக்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு மஹிந்த ராஜபக்ஷவின் சேவையை பாராட்டுகின்ற மக்கள் இந்த மாகாணத்தில் உள்ளனர். உங்களுக்கான கடமைகளையும் பொறுப்புகளையும் நாங்கள் தொடர்ந்து செய்வோம். – என்று தெரிவித்துள்ளார்.



# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் பல அடுக்குகளில் மனித எலும்புக் கூடுகள்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும், ஒன்றின் மீது ஒன்று பல அடுக்காகவும் காணப்படுவதால், எத்தனை எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன என்பதை இனங்காண்பதில் சவால்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் ஐந்தாவது நாளாக நேற்று இடம்பெற்ற நிலையில், அகழ்வுப் பணிகளின் நிறைவில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்ரெம்பர் 6 ஆம் திகதி புதனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

இந் நிலையில் ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று செப்ரெம்பர் 11 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றன.

அகழ்வாய்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ். நிரஞ்சன், தடையவியல் பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகளில் இரண்டுமனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாகவும், ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒரு துப்பாக்கி ரவையும் தடயப் பொருளாக எடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றின் மீது ஒன்று மிக நெருக்கமாகவும், பல அடுக்குகளாகவும் மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் காணப்படுகின்றன. எனவே எத்தனை மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளன என்பதை தற்போது இனங்காணமுடியாதுள்ளது.

படிப்படியாக அகழ்வுகளை மேற்கொண்டு, மனித எச்சங்களின் மேலுள்ள மண்ணை அகற்றும்போது தான் எத்தனை மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளன என்பதை இனங்காண முடியும்.

இன்னும் ஓரிரு தினங்களில் எத்தனை எலும்புக்கூட்டுத்தொகுதிகள் இனங்காணப்பட்டுள்ள என்பதை தெரிவிக்கமுடியும்.

அதேவேளை கடந்த செப்ரெம்பர் வெள்ளியன்று இரண்டு மனித எலும்புக் கூட்டுத்தொகுதிகள் மீட்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மொத்தம் 04 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாகவும், ஒரு மனித எலும்புக் கூட்டுத் தொகுதி பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 14மீற்றர் நீளத்திலும், 3மீற்றர் அகலத்திலும், 1.5மீற்றர் தொடக்கம் 2மீற்றர் வரையான ஆழத்திலும் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த செப்ரெம்பர் 9 ஆம் திகதி சனிக்கிழமையன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தகடு ஒன்று எடுக்கப்பட்டது. அதுதொடர்பில் பின்னர் அறியத்தரப்படும். - என்றார்.

மேலும் குறித்த ஐந்தாம் நாள் அகழ்வுப்பணிகள் இடம்பெறும் இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் வருகைதந்திருந்தனர். முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், அனந்தி சசிதரன், முன்னாள் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், கிராமமட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.





# ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழு கண்காணிப்புக்கு இலங்கை வருகை



கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவொன்று நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அழைப்பிற்கிணங்க அந்தக் குழுவினர் நாட்டிற்கு வந்துள்ளனர்.

இலங்கையில் கடல்சார் அனர்த்தங்கள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்ளும் முறையை கண்காணிப்பதற்காகவும் எதிர்காலத்தில் அதற்கு உரிய முன்னெச்சரிக்கையான திட்டங்களை கையாள்வது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபுணர் குழு இலங்கை வந்துள்ளது.

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் அழைப்பின் பேரில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 9 பேர் கொண்ட நிபுணர் குழுவே இலங்கைக்கு வந்துள்ளது.

இந்தக் குழுவினர் இலங்கையின் பல்வேறு கரையோர பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளமையுடன், கடல்சார் விடயங்களைக் கையாளும் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்த உள்ளனர்.

அத்துடன், பல்வேறு பகுதிகளில் ஆய்வுகளை நடத்தி கடல்சார் அனர்த்தம் ஏற்பட்டால் இலங்கையின் அணுகுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் விளக்கமளிக்க உள்ளனர்.

இம்முயற்சியின் முதன்மை நோக்கம் கடல்சார் பேரிடர் காலத்தில் அதற்கான பதிலளிப்பு முறைகளை மேம்படுத்துவதும், கண்காணிப்பு செயல்முறை முடிந்த பிறகு அவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஆகும்.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை பாதுகாப்பது தொடர்பில் 3 செயன்முறைகளின் ஊடாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இலங்கை அதிகாரிகளை தெளிவுபடுத்தவுள்ளனர் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கப்பல் விபத்து மற்றும் கடலோர குழாய் அமைப்புகளில் காணப்படும் கோளாறுகள் ஆகியவற்றை முன்கூட்டியே தடுத்தல், கப்பல் விபத்துகள் ஏற்பட்டால் அதன் பாதிப்பை சரியாக மதிப்பிடுதல் மற்றும் அவ்வாறான பாதிப்புகளுக்கான இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான சரியான நடைமுறை ஆகிய செயன்முறைகள் தொடர்பில் இலங்கை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இந்த தெளிவுபடுத்தலுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபை, கரையோர பாதுகாப்பு திணைக்களம், இடர்முகாமைத்துவ நிலையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

நிபுணர் குழு தற்போது கடல்சார் பேரழிவுகளுக்கான காரணங்களை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பான அரசு நிறுவனங்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் சமீபத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் இணைந்து ஆன்-சைட் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

முறையான தொழில்நுட்ப நிபுணத்துவம் இல்லாத காரணத்தினால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கடல்சார் அனர்த்தத்தைத் தொடர்ந்து இலங்கையின் கடற்பரப்பில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீட்டின் பின்னர் நாட்டின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

# இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இடைநிறுத்தவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் மனித உரிமை பேரவையில் வலியுறுத்தல்

இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இடைநிறுத்திவைக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறலை நிலைநாட்டுதல் மற்றும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை நிறுத்துதல் ஆகியவற்றையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மேலும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 54 அமர்வு நேற்று ஆரம்பமானவேளை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை குறித்த அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நல்லிணக்கப் பொறிமுறைகளை கருத்தில் எடுத்துள்ளோம் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்களை கவனத்தில் எடுத்துள்ள அதேவேளை, கருத்துச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் இலங்கையின் அனைவரினதும் பொருளாதார, சமூக, கலாசார சுதந்திர உரிமைகள் ஆகியவை உட்பட மனித உரிமைகளை உறுதி செய்வதற்கான அவசியத்தை வலியுறுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக எடுக்கப்பட்ட சாதகமான நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதார ஸ்திரதன்மைக்கு வழிவகுத்ததை ஏற்றுக்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், பலவந்தமாகக் காணாமல் செய்யப்பட்ட பல சம்பவங்களிற்குத் தீர்வை காணல் ஆகியவற்றையும் வலியுறுத்தியுள்ளது.

அமைதியான ஒன்றுகூடுதலிற்கான உரிமையை உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமைதியான வழியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக பலத்தைப் பிரயோகிப்பதைத் தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தைப் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை அது சர்வதேச சட்டங்கள் தராதரங்களை முழுமையாக பின்பற்றும் வரை இடைநிறுத்தி வைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், பொறுப்புக்கூறல், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை நிறுத்துதல் ஆகியவற்றையும் வலியுறுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.09.2023




இன்று சிறந்த பலன்கள் காண எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். கலகலப்பாகவும் நகைச்சுவையாகவும் இருந்தால் மன உளைச்சலின்றி இருக்கலாம். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. விரும்பத்தகாத சூழ்நிலையை தவிர்த்திடுங்கள்.

பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். கவனமாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப்பூர்வமாக அணுகுவீர்கள். இதனை தவிர்த்து நட்பு முறையோடு பழக வேண்டும். இதனால் அன்பு அதிகரிக்கும்.

குடும்ப செலவினங்கள் அதிகரித்து காணப்படும். தேவையற்ற வீண் செலவுகள் காணப்படுகின்றது. இடு உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது முக்கியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நற்பலனகள் அதிகமாகக் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இனிமையான மற்றும் வசீகரமான வார்த்தைகள் பேசி பிறரை கவர்வீர்கள்.

உங்கள் செயல் திறனில் வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது. இன்று வளர்ச்சி மற்றும் பலன்கள் பெருகி காணப்படாது.

பணியின் சுமை கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை முறையாக திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையிடம் மென்மையாகப் பழக வேண்டும். உங்கள் பிரியமானவரின் கருத்துக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் தாயார் மூட்டுவலி அல்லது கால் வலியால் அவதிப்படலாம்.




அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை இன்று மிகவும் அவசியம். தெய்வீகப் பாடல்கள் கேட்பது பொழுது போக்கு செயல்களில் பங்கு பெறுவது உதவிகரமாக இருக்கும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். நட்புடன் அணுகுவது இன்று மிகச் சிறந்தது.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. பண இழப்பைத் தடுக்க சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். ஜீரணம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்று உங்கள் இலக்குகளை அடைய புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டும். இன்று செயல்களை யுக்தியுடன் மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாக செயலாற்ற அதிக முயற்சி வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் பணத் தேவைகளை இன்று சமாளிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். பல் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நம்பிக்கையான அணுகுமுறை மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புதிய நண்பர்கள் ஏற்படுத்திக் கொள்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் தலைமைப் பொறுப்பை சிறப்பாக வகிப்பீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களை சிறப்புடன் வழிநடத்திச் செல்வீர்கள்.

உங்கள் துணைக்கு அவர் ஆச்சரியப்படும் அளவிற்கு பணத்தையும் பரிசையும் வாரி வழங்குவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் தேவையைவிட அதிகமாக இருக்கும். தகுந்த முதலீட்டு முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றலும் நல்ல ஆரோக்கியமும் காணப்படும்.




இன்று பரந்த நோக்குடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் லட்சியத்தை எளிதாக அடைவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை அசாத்தியமான வெற்றியை பெற்றுத் தரும். ஆன்மீக மற்றும் தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலை காணப்படும். திருப்தி நிலவும். புது விஷயங்களை கற்றுக் கொள்வீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவர் மகிழ்ச்சி அடைவார். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று பணவரவிற்கு ஏற்ற நாள். உங்களின் திறமையான பணிக்கு ஊக்கத்தொகை வகையில் பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. அதிக சிந்தனை உங்களை பாதிக்கும் என்பதால் அதனை தவிர்த்து விடுங்கள். இன்று நல்ல பலன்களை அனுபவிக்க உகந்த நாள்.

இன்று அதிக கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும். அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் இருவரிடையே தவறான புரிந்துணர்வு காணப்படும். எனவே உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

கவனக்குறைவு காரணமாக பண இழப்பு நேர வாய்ப்புள்ளது.எல்லா வகையிலும் தேவையற்ற செலவினங்களை கட்டுப்படுத்த வேண்டும்.

உடற்பயிற்சி அல்லது யோகா மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -12.09.2023

## தனுசு

இன்று சுமுகமான பலன்கள் கிடைக்காது. திறமையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். சில சமயங்களில் பொறுமை இழப்பீர்கள். அமைதியாக இருக்க முயலுங்கள்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். முறையான திட்டம் உங்கள் பணிகளை நேரத்தில் முடிக்க உதவிகரமாக இருக்கும்.

இன்று நீங்கள் உணர்ச்சவசப்பட்டு காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடத்தில் வெளிபடுத்துவீர்கள். நல்ல உறவைப் பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண அதிர்ஷ்டத்திற்கான வாய்ப்பு குறைவு. தேவையற்ற செலவினங்கள் செய்ய நேரும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். சில ஒவ்வாமை காரணமான பாதிப்பு ஏற்படும்.

## மகரம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உற்சாகம் மற்றும் மகிழ்ச்சி காரணமாக செயல்களை எளிதில் முடிப்பீர்கள். அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக தன்னிச்சையாக முடிப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டு உறவு வலுப்படும்.

இன்று பணபுழக்கம் தேவையைவிட அதிகமாக காணப்படும். வங்கியில் தேவையான பணத்தை பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களின் மன தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## கும்பம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இன்றைய செயல்கள் சுமுகமாக நடக்கும். புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். இன்று மங்களகரமான நிகழ்ச்சிகள் நடக்கும்.

பணியைப் பொறுத்தவரை வெற்றி வாய்ப்பு உள்ளது. உங்கள் கீழ்ப்பணி புரிபவரிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் இருவரும் உங்கள் நண்பரின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொள்வீர்கள்.இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தேக ஆரோக்கியம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

## மீனம்

இன்றைய செயல்களில் மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இதனால் கடினமான சூழ்நிலைகளை கையாள முடியும் அதிகமாக சிந்திப்பதை தவிர்க்க வேண்டும். எண்ணத்தில் தெளிவு வேண்டும்.

உங்கள் பணியில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டும். சில வேலைகள் முடிக்க முடியாமல் போகலாம்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும். உறவின் மதிப்பை உணர்ந்துகொள்ள முடியும்.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படலாம். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.



